28.05.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### முல்லைப் பெரியாறு அணையில் உபரிநீர் மதகுகளை இயக்கி துணைக் கண்காணிப்புக் குழு ஆய்வு

முல்லைப் பெரியாறு அணையில் வெள்ளிக்கிழமை உபரிநீர் மதகுகளை இயக்கி துணைக் கண்காணிப்புக் குழுவினர் ஆய்வு நடத்தினர்.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த உத்தரவிட்ட உச்ச நீதிமன்றம், அணையை கண்காணிக்குப் பராமரிக்க, மத்திய நீர்வள ஆணைய தலைமை பொறியாளர் எல்.ஏ.வி.நாதன் தலைமையில் மூவர் கண்காணிப்புக் குழுவை அமைத்தது. இந்தக் குழுவுக்கு உதவியாக, மத்திய நீர்வள ஆணைய செயற்பொறியாளர் அம்பர்ஜி ஹாரிஷ் கிரீஷ் தலைமையில் ஐவர் கொண்ட துணைக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டது. இந்தத் துணைக் கண்காணிப்புக் குழுவினர், வெள்ளிக்கிழமை அணையில் உள்ள பிரதான அணை, பேபி அணை, மண் அணை ஆகியவற்றை ஆய்வு செய்தனர். பின்னர், அணையின் சுரங்கப் பகுதியில் அழுத்தத்தால் ஏற்படும் கசிவுநீரை அளவீடு செய்தனர்.

அதேபோல, அணையிலிருந்து கேரள பகுதிகளுக்கு உபரிநீரை வெளியேற்றும் 13 மதகுகளில், 11 மதகுகள் இயக்கி பரிசோதிக்கப்பட்டன. ஆய்வுக்குப் பின்னர், மதகுகள் நல்ல நிலையில் இருப்பதாக பதிவேட்டில் அந்தக் குழுவினர் பதிவு செய்தனர்.

இதையடுத்து துணைக் கண்காணிப்புக் குழுவினர் கூறியதாவது: இந்த ஆய்வு அறிக்கை மூவர் குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும். ஆய்வுக்குப் பின்னர் நடக்கப்படும் ஆய்வுக் கூட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. மழைக் காலம் தொடங்கவிருப்பதால் முன்னேற்பாட்டு பணிகள் தயாராக உள்ளன என்று அவர்கள் தெரிவித்தனர்.

தமிழகம் மற்றும் கேரளத்தில் புதிதாக பதவியேற்ற அரசுகள் தங்கள் மாநில பிரதிநிதிகளுக்கு விவாதிக்க வேண்டிய தகவல்களை அளிக்கவில்லை என்பதால் ஆய்வுக் கூட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக கேரள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 4 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் மையங்கள்

மப்பேடு, பேரம்பாக்கம், பாலவேடு, பள்ளிப்பட்டு ஆகிய இடங் களில் நேரடி நெல் கொள்முதல் மையங்கள் அமைக்கப்படும் என திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் ஆட்சியர் எ.சுந்தரவல்லி தெரிவித்தார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் எ.சுந்தரவல்லி தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் ஆட்சியர் பேசியதாவது:

திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயம் அதிகளவில் நடைபெறும் இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படும். குறிப்பாக பாலவேடு, பேரம்பாக்கம், மப்பேடு மற்றும் பள்ளிப்பட்டு பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பொன்னேரி பகுதியில் இறால் பண்ணைகளை அகற்ற தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஏரி, குளங்களின் ஆக்கிரமிப்புகள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்களை குளத்தோடு சேர்க்கும் பணியும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்றார்.

இதைத் தொடர்ந்து விவசாயிகள் தெரிவித்த குறைகள், கோரிக்கைகள் வருமாறு:

அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் பூச்சிக்கொல்லி மருந்துகள் உரங்கள் போதுமான அளவு இருப்பு வைக்க ஆவன செய்ய வேண்டும். மேலும், பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்த துண்டுப் பிரசுரங்கள் வேளாண்மைத் துறை மூலம் அச்சிட்டு விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

கரும்பு விவசாயிகளுக்கு கரும்புக்கான முழுத் தொகையை நிலுவையின்றி வழங்க வேண்டும்.

அரசால் அறிவிக்கப்பட்டுள்ள சிறு, குறு விவசாயிகளுக்கான பயிர்க் கடனை பெரிய விவசாயிகளுக்கும் தள்ளுபடி செய்ய அரசிடம் பரிந்துரைக்க வேண்டும்.

தேவம்பட்டு, கருணாகரச்சேரி கிராமங்களில் கால்நடைப்பட்டி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏரிப் பாசனக் கால்வாய்களை சீரமைக்க வேண்டும். திருவள்ளூர் - கடம்பத்தூர் இடையே பழுதடைந்துள்ள சாலையை சீரமைக்க வேண்டும். ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மழைநீர் வடிய கால்வாய்கள் அமைக்கவும், மழைநீரை சேமிக்க தேவைப்படும் இடங்களில் தடுப்பணை அமைக்கவும் வழிவகைகள் செய்ய வேண்டும் என வலியுறுத்தினர்.

வரும் பட்டத்துக்கு தேவையான விதைகள், உரங்களை போதிய அளவில் வேளாண்மை விரிவாக்க மையங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைத்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என வேளாண் அதிகாரிகளுக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார்.

பின்னர் கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களையும் அவர் பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் முத்து, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் வி.மகேந்திரன், கோட்டாட்சியர் நாராயணன், வேளாண்மை இணை இயக்குநர் முருகவேல், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பாபு, அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## மானாமதுரையில் ஆலங்கட்டி மழை

சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் வெள்ளிக்கிழமை மாலை சூறைக் காற்றுடன் ஆலங்கட்டி மழை பெய்ததில், வீட்டின் கூரை, வாழை மரங்கள் சேதமடைந்தன.

மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் கடந்த சில நாள்களாக வெயில் வாட்டி வந்தது. இந்நிலையில், வியாழக்கிழமை மாலை இப்பகுதிகளில் பலத்த காற்றுடன் பரவலாக மழை பெய்தது. இதனால், திருப்புவனம் அருகே லாடனேந்தலில் சாலையின் குறுக்கே மரம் சாய்ந்து, போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தொடர்ந்து, வெள்ளிக்கிழமை பகலில் வெயில் கொளுத்திய நிலையில், மாலையில்

மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் சூறைக் காற்றுடன் மழை பெய்யத் தொடங்கியது. மானாமதுரை சிப்காட் பகுதியில் ஆலங்கட்டி மழை பெய்ததால், சாலையில் ஐஸ் கட்டிகள் கிடந்தன.

மானாமதுரை அருகே மேலப்பசலை கிராமத்தில் சூறைக்காற்று காரணமாக 5 வீடுகளின் ஓடுகள் சரிந்து விழுந்து நொறுங்கின. மேலும், இக் கிராமத்தில் வாழை மரங்கள் சாய்ந்து சேதமடைந்தன. இரவு வரை மழை தொடர்ந்ததால், அவ்வப்போது மின்தடை ஏற்பட்டு மானாமதுரை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகள் இருளில் மூழ்கின. கடந்த இரு நாள்களாக மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் பெய்து வரும் மழையால் வெயிலின் தாக்கம் குறைந்து குளுமை நிலவுவதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## தேவகோட்டையில் பலத்த மழை

தேவகோட்டை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை பலத்த மழை பெய்தது.

தேவகோட்டையில் கடந்த சில நாள்களாகவே வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால், பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வந்தனர். இந்நிலையில், வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் இடியுடன் பலத்த மழை பெய்தது. தேவகோட்டை பேருந்து நிலையம், ஒத்தக்கடை, ராம் நகர் மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளிலும் ஒரு மணி நேரத்தும் மேலாக மழை பெய்தது. இதனால், சாலைகளில் தண்ணீர் தேங்கி, போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. இந்த மழையால், வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியதால், பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 36.22 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 36.22 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 265 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 1.89 டி.எம்.சி.

## 100 நாள் வேலையில் மரக்கன்று நடும் பணிக்கு முக்கியத்துவம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில், மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கும் பணிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றார் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் அருகே நடுக்கோம்பைப் பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வனத்துறையின் மூலம் ரூ.7,52,000 மதிப்பீட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள நாற்றங்கால்களை ஆய்வு செய்தார். இந்த வளர்ப்புக் குடில்களில் 10,000 புங்கன், 12,000 தகரை, 10,000 சொர்கம், 15,000 சந்தனம், 10,000 புளியங்கன்று, 3,000 அழகு கொன்றை, 5,000 வேம்பு, 5,000 நாவல், 5,000 சரக்கொன்றை, 10,000 வாகை மரக் கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இங்கு ஆய்வு செய்த ஆட்சியர், இந்த வகை மரக்கன்றுகளுடன் அரசு மற்றும் ஆல மரக் கன்றுகளும் உற்பத்தி செய்ய அறிவுரை வழங்கப்பட்டது. இதுபோல மரக்கணுக்கள் மூலம் நாற்றுகள் உற்பத்தி செய்ய அறிவுரை வழங்கினார். வளர்க்கப்பட்ட மரக்கன்றுகளை நன்முறையில் பராமரிக்க வேண்டும். இவை வளர்ந்த பின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பல்வேறு இடங்களில் நடப்பட உள்ளன என அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பச்சுடையாம்பட்டி ஊராட்சி பச்சுடையாம்பட்டி ஏரியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை

உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.5.93 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மரக்கன்றுகள் நட்டு அவற்றுக்கு நீர் ஊற்றி பராமரிக்கும் பணியினை ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது இறந்து போன செடிகளுக்குப் பதிலாக உடனுக்குடன் மாற்று செடிகள் நடப்படவேண்டும் என்றும் முறையாக நீர் ஊற்றிப் பராமரிக்க வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியம். பழையபாளையம் ஊராட்சி, பழையபாளையம் கரட்டுக்குட்டையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.5.39 லட்சம் மதிப்பீட்டில் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் பணியினையும். அலங்காநத்தம் சுப்பன் தோட்டம் முதல் பெரியசாமி தோட்டம் வரை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ ரூ.20.13 லட்சம் மதிப்பீட்டில் வரத்து வாய்க்கால் தூர் வாரும் பணிகளை பார்வையிட்டு பணியிலிருந்து பணியாளர்களின் வருகையை வருகைப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் ரெட்டிபட்டி ஊராட்சி அண்ணாநகரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.5.39 லட்சம் மதிப்பீட்டில் மரக்கன்றுகள் நடுவதற்கான குழிகள் அமைத்தல் மற்றும் மரக்கன்றுகள் நட்டுப் பராமரித்தல் உள்ளிட்ட பணிகளை ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கும் பணிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றார் ஆட்சியர்.

ஆய்வின் போது நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எஸ்.கவிதா, மாவட்ட வன அலுவலர் நாகராஜன், செயற்பொறியாளர் கே.சரவணகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 46.62 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை காலை 46.62 அடியாக இருந்தது.

அணைக்கு நொடிக்கு 132 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்கு நொடிக்கு 1,000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 15.75 டி.எம்.சி.யாக இருந்தது. அணைக்கு வரும் நீரின் அளவைவிட, குடிநீர்த் தேவைக்கு திறக்கப்படும் நீரின்

அளவு அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் மெல்ல சரிந்து வருகிறது. ஜூன் 12 -ஆம் தேதியை நெருங்கும் நேரத்தில் நீர்மட்டம் சரிந்து வருவது காவிரி டெல்டா விவசாயிகளை கவலையடையச் செய்துள்ளது.

## ஜூன் 1, 2 ல் நாட்டுக்கோழி வளர்ப்பு தொடர்பான பயிற்சி முகாம்

நாகப்பட்டினத்தில் ஜூன் 1 மற்றும் 2 ல் நாட்டுக்கோழி வளர்ப்பு தொடர்பான இலவச பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து நாகப்பட்டினம் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் பி. சீனிவாசன் வெளியிட்டிருப்பது:

நாகப்பட்டினம் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஜூன் 1, 2 தேதிகளில் நாட்டுக்கோழி வளர்ப்பு தொடர்பான இலவச பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

முகாமில் நாட்டுக்கோழி இனங்கள், இடத்தேர்வு, கொட்டகை அமைக்கும் முறை, தீவன பராமரிப்பு, நோய்த் தடுப்பு, பண்ணை பொருளாதாராம் போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படும்.

காலை 10 மணிக்கு தொடங்கும் பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் நேரிலோ அல்லது 04365-247123 என்ற எண்ணிலோ நாகை கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை அணுகலாம் எனக் கூறியுள்ளார்.

## சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும், மழை வளத்துக்கும் மரங்கள் வளர்ப்பது அவசியம்

சுற்றுச் சூழல் பாதிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும், நல்ல மழை வளம் பெறவும் மரங்களை வளர்க்க வேண்டும் என நாகை மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி தெரிவித்தார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் 68 வது பிறந்த நாளை முன்னிட்டு வனத்துறை சார்பில் வேதாரண்யம் ஒன்றியம் கோவில்பத்து, கீழ்வேளூர் ஒன்றியம் ஆனைமங்கலம் ஆகிய இடங்களில் நாற்றாங்கால் அமைத்து மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இவைகளை நாகை மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி வெள்ளிக்கிழமை பார்வையிட்டு கூறியது:

கோவில்பத்து, ஆனைமங்கலம் ஆகிய இடங்களில் வனத்துறை சார்பில் நாற்றாங்காலில் 1,17,000 பல்வகை மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. பூவரசு, நீர்மருது, இலுப்பை, நாவல், புங்கை, புளி, நெல்லி, தேக்கு, வேம்பு, மகாகனி, அரசமரம், மந்தாரை, தூங்குவாகை, சிசு, குமிழ் உள்ளிட்ட பலவகை இன கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இந்த கன்றுகள் அக்டோபர் மாதம் தொடங்கவுள்ள பருவ மழைக்காலத்தில், மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலமாக உள்ளூர் கிராம மக்களை கொண்டு, நடப்பட்டு வளர்க்கப்படும். மரங்கள் வளர்ப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும், நல்ல மழைவளம் பெறவும் முடியும் என்றார்.

ஆனைமங்கலத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெறுவதை பார்வையிட்டு, வாய்க்காலிலிருந்து எடுக்கப்படும் மணலை சற்று தொலைவில் கொட்டவேண்டும் என்றும் கருவேல மரக்கன்றுகள் சிறியதாக இருக்கும்போதே அவற்றை வேருடன் அகற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும் சாலையோரங்களில் நட்டுள்ள மரக்கன்றுகளை சுற்றி வேலி அமைத்து பாதுகாப்பதுடன் தினமும் தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஆய்வின் போது மாவட்ட வன உயிரினக் காப்பாளர் ச. வித்யா, மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் சங்கர், செயற்பொறியாளர் செல்வராஜ், வனச்சரக அலுவலர் கோபிநாத், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வனத்துறையினர், அரசு அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

## பாபநாசம், சேர்வலாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு!

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் மிதமான மழையால் பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் 2 தினங்களாக மிதமான மழை பெய்தது. இதையடுத்து பாபநாசம், சேர்வலாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 437 கனஅடி, சேர்வலாறு அணைக்கு 300 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. நீர்வரத்து அதிகரித்தை அடுத்து சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 1 அடி உயர்ந்து 76.38 அடியாகவும், பாபநாசம் அணையின் நீர்மட்டம் 63.10 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 77.16 அடியாகவும்,

கடனாநதி அணையின் நீர்மட்டம் 28.70 அடி, ராமநதி அணையின் நீர்மட்டம் 25 அடி, கருப்பாநதி அணையின் நீர்மட்டம 24.94 அடி, குண்டாறு அணையின் நீர்மட்டம் 11.80 அடி, அடவிநயினார் அணையின் நீர்மட்டம் 40.50 அடி, வடக்குப் பச்சையாறு அணையின் நீர்மட்டம் 40.50 அடி, கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம் 2.50 அடி, நம்பியாறு அணையின் நீர்மட்டம் 12.89 அடியாகவும் இருந்தது.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காக பாபநாசம் அணையில் இருந்து 100 கனஅடி, மணிமுத்தாறு அணையில் இருந்து 300 கனஅடியும் தாமிரவருணி ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உருகினாலும் உருவாகும் பனியாறுகள்**

வெயில்காலத்தில் பனிப்பாறைகள் உருகுவதால் வடமாநில நதிகள் வற்றாத ஜீவ நதிகளாக உள்ளன. ஆர்டிக், அண்டார்டிகாவிற்கு வெளியே உள்ள பனியாறுகளில் மிகப்பெரிய பனி ஆறு சியாசின். இதன் நீளம் 72 கி.மீ.,. காஷ்மீரில் சியாசின் தவிர பயாபோ, ஹிஸ்பூர், நுப்ரா, பால்ட்ரோயா போன்றபனியாறுகள் உள்ளன. இவை கடும் கோடையில் உருகும் போது அவற்றை ஈடுகட்டும் வகையில் புதிய பனிக்கட்டிகள் தோன்றுகின்றன. கோடையில் உருகும் பனியாறு குளிர்

காலத்தில் மீண்டும் பழைய நிலையை அடைந்த விடுகிறது. பனியாறுகள் ஏற்படுத்தும் இயற்கைச் சமநிலை வடமாநிலங்கள் பலவற்றை வறட்சியின் பிடியில் இருந்து காக்கிறது.

## பூக்களை வளர்த்தால் ' நேச்சர் தெரபி' மலர்க்கண்காட்சி விழாவில் புதிய தகவல்

ஊட்டி: ' மரம், செடி, கொடிகளை வளர்ப்பதன் மூலம் நோய்கள் குணமாகும்' என, தெரிவிக்கப்பட்டது. ஊட்டி தாவரவியல் பூங்காவில் நடக்கும் மலர்க்கண்காட்சி, மீண்டும் வந்த அ.தி.மு.க., அரசின் அனுமதியுடன் நடக்கும் முதல் அரசு விழா என்ற நிலையில், பலராலும், பல விதங்களில் கவனிக்கப்பட்டது.

கல்வி சுற்றுலா

துவக்க நிகழ்ச்சியில், கலெக்டர் சங்கர் பேசியதாவது: நீலகிரியின் இயற்கை, பசுமை யை சுற்றுலா பயணிகள் உணர்ந்து கொள்ளவும், மரம் வளர்ப்பு, பூந்தோட்ட வளர்ப்பு, வன வளம் பாதுகாப்பதன் அவசியத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தான், மலர்க்கண்காட்சி உட்பட கோடை விழா நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

மரம், செடி, கொடிகளை வளர்ப்பது, மனதிற்கு இதமளிக்கும்; அதன் மூலம் நோய்கள் குணமாகும். பூந்தோட்ட வளர்ப்பை, வெளிநாடுகளில், 'ஈகோ தெரபி' என்ற பெயரில் ஊக்குவிக்கின்றனர். நமது நாட்டில், அவை 'நேச்சர் தெரபி' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இயற்கையை நேசிக்க அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு சங்கர் பேசினார்.

வேளாண்மை துறை கமிஷனர் விஜயகுமார் பேசுகையில், "அரசின் நுண்ணுயிர் பாசன திட்டத்தால், நீலகிரியில், 3 லட்சம் ஏக்கர் பரப்பிலான விவசாய நிலங்கள் பயன் பெற்றுள்ளன. 50, 75, 100 சதவீத மானியத்தில் விவசாய இடுபொருள், உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன," என்றார்.

தொடந்த புகழ் மாலை

அரசின் சாதனைகளை அதிகாரிகள் பட்டியலிட, நீலகிரி எம்.பி., கோபாலகிருஷ்ணன் பேசுகையில்,“2021லும் அ.தி.மு.க., தான் மீண்டும் ஆட்சி அமைக்கும்,” என்றார்.

ராஜ்ய சபா எம்.பி., அர்ஜூணன் பேசுகையில்,“முதல்வரின் முயற்சியால் தான், நரிக்குறவர் இனத்தை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்தது. அதே போன்று, படுகர் இன மக்களையும் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க முதல்வர் முயற்சி எடுப்பார்,” என்றார்.

துவக்க விழாவில், அதிகாரிகள் முதல் அரசியல்வாதிகள் வரை அனைவரும் அ.தி.மு.க., அரசு மற்றும் முதல்வருக்கு 'வழக்கம் போல்' புகழ் பாடினர்.-

எம்.ஜி.ஆர்., விரும்பிய திட்டம்!

'புகழ் பாடலுக்கு' இடையே 'கன்னிப்' பேச்சை பதிவு செய்த குன்னுார் அ.தி.மு.க., எம்.எல்.ஏ., சாந்தி ராமு,“முதல்வரால், நீலகிரி தோட்டக்கலை துறையின் செயல்பாடுகள் சிறப்பாக உள்ளன; அவற்றை அதிகாரிகள் தொடர வேண்டும்,” என்றார். அடுத்து, ஊட்டி காங்., எம்.எல்.ஏ., கணேஷ் பேசுகையில், “உலகம் சுற்றும் வாலிபன் ஷூட்டிற்கு ஊட்டி வந்து சென்ற எம்.ஜி.ஆர்., ஊட்டியில் 'ரோப் கார்' அமைக்க வேண்டும் என, விரும்பினார். அவரது கனவை, அ.தி.மு.க., அரசு நனவாக்க வேண்டும். ஊட்டி நகராட்சி செயல்பாடுகளை மேம்படுத்த வேண்டும். பார்க்கிங் வசதியை மேம்படுத்த வேண்டும். தோட்டக்கலை துறையில், தற்காலிக பணியாளர்களாக உள்ள, 900 பேரை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்,” என, பிரச்னைகளை முன்வைத்து பேசினார். இது, மக்கள் மத்தியில் வரவேற்ப்பை ஏற்படுத்தியது.

## 'கார்னேஷன்' செடி வளர்ப்பு திட்டம் வெற்றி! விரைவில் நாற்றுகளை வழங்க முடிவு

ஊட்டி: 'ஊட்டி 'கார்னேஷன் நர்சரி' யில் நடந்த, கார்னேஷன் செடி வளர்ப்பு திட்டம் வெற்றி பெற்றுள்ளதால், முடங்கி கிடந்த முதல்வரின் திட்டம் புத்துயிர் பெறும்' என, எதிர்பார்க்கப்படுகிறது.

நீலகிரியில், கடந்த, 10 ஆண்டுகளுக்கு முன் நலிவடைந்த தேயிலை தொழிலுக்கு மாற்றாக, மலர் சாகுபடியை முதல்வர் ஜெயலலிதா ஊக்குவித்தார். மிக எளிதாக கிடைத்த தோட்டக்கலை மானியம், வங்கிக் கடன் மூலம், ஏராளமான சிறு, குறு விவசாயிகள், பசுமைக் குடில் அமைத்து, கார்னேஷன் மலர் சாகுபடியில் ஈடுபட்டனர்.

இத்தாலி, ஹாலந்து, ஸ்பெ யின் உட்பட நாடுகளில் இருந்து தான், கார்னேஷன் செடிகளுக்குரிய தாய் செடிகளை வாங்க வேண்டும் என்ற நிலையில், தனியார் ஏஜன்ட்கள் மூலம், கார்னேஷன் நாற்றுகளை வாங்கி, விவசாயிகள் நட்டு, வளர்த்தனர். இருப்பினும், உரிய மகசூல் கிடைக்காததால், தொழில் நலிந்தது. ஏஜன்ட்கள், தரமற்ற நாற்றுகளை வழங்கியது தான், தொழில் நலிவடைய காரணம் என, மலர் சாகுபடியாளர்கள் கூறினர்.

இதுகுறித்து விரிவான ஆய்வு நடத்திய அரசு, கடந்த இரு ஆண்டுக்கு முன், தோட்டக்கலை துறை மூலம், ஊட்டி தும்மனட்டி அரசுப் பண்ணையில், கார்னேஷன் நாற்றுகளை தயாரித்து, விவசாயிகளுக்கு நேரடியாக வழங்க, 1.42 கோடி ரூபாய் ஒதுக்கியது. அதன்படி, பண்ணையில், கார்னேஷன் நர்சரி அமைப்பதற்கான உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கார்னேஷன் நாற்று உற்பத்திக்கு ஹாலந்து, ஸ்பெயின் நாடுகளில் உள்ள கம்பெனி

களிடம் இருந்து, விதை கிழங்கை வாங்கும் உரிமத்தை பெற, தோட்டக்கலை துறையினர் முயற்சி செய்தனர்.

ஓராண்டு முயற்சிக்கு பின், ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஒரு நிறுவனம், கார்னேஷன் நாற்றுக்குரிய விதைக் கிழங்கை வழங்க முன் வந்தது. அந்நிறுவனத்தால், இத்தாலியில் இருந்து தருவிக்கப்பட்ட கார்னேஷன் நாற்றுகள் நர்சரியில் நடவு செய்யப்பட்டன. தற்போது அவை நல்ல முறையில் வளர்ந்துள்ளன. விரைவில், விவசாயிகளுக்கு மானிய விலையில் நாற்றுகள் வழங்கப்படும் என, எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று ஊட்டி யில் நடந்த மலர் கண்காட்சியில், வேளாண் உற்பத்தி கமிஷனர் விஜயகுமார் பேசுகையில், "தும் மனட்டி அரசு தோட்டக்கலை பண்ணையில் தயாராகி உள்ள இத்தாலி நாட்டின் கார்னேஷன் நாற்றுக்கள், ஜூன் முதல் வாரத்தில் இருந்து சிறு, குறு மலர் சாகுபடியாளர்களுக்கு வழங்கப்படும்," என்றார். இதன் மூலம் முடங்கி கிடக்கும், முதல்வரின், மலர் சாகுபடி தொழில் புத்துயிர் பெறும் என, எதிர்பார்க்கப் படுகிறது.

## நத்தம் பகுதியில் தக்காளி விலை உயர்வு வரத்து குறைந்ததால் கிலோ ரூ.60

கோபால்பட்டி: கோபால்பட்டி மார்க்கெட்டில் தக்காளி விலை ரூ.60 ஆக உயர்ந்துள்ளது.

நத்தம் அருகே கோபால்பட்டி சுற்றுப்பகுதியை சேர்ந்த தலையாரிபட்டி, ஜோத்தாம்பட்டி, சில்வார்பட்டி, செடிப்பட்டி, சின்னக்காளிப்பட்டி, முளையூர், எரமநாயக்கன்பட்டி, அஞ்சு

குழிப்பட்டி, வி.எஸ்.கோட்டை, சக்கிலியன்கொடை, கணவாய்பட்டி, செங்குறிச்சி, ஒத்தக்கடை, மொட்டையகவுண்டன்பட்டி உள்ளிட்ட கிராமப்பகுதிகளில் தக்காளி அதிகம் சாகுபடியாகிறது.

இப்பகுதி விவசாயிகள் தக்காளியை பயிராகவும், கம்பி வலை அமைத்து கொடி தக்காளியாகவும் பயிர் செய்கின்றனர். கொடி தக்காளி சாகுபடியில் சேதம் குறைந்து அதிக மகசூல் கிடைக்கிறது. இப்பகுதியில் விளையும் தக்காளியை கோபால்பட்டி மற்றும் கொசவபட்டி மார்க்கெட்டில் விவசாயிகள் விற்பனை செய்கின்றனர்.

கடந்த வாரங்களில் ரூ.40 முதல் 45 வரை விற்றது. சமீபத்தில் பெய்த கோடை மழையால் காய்கள் உதிர்ந்து தக்காளி வரத்து குறைந்துள்ளது. இதனால் கிலோவுக்கு ரூ.10 முதல் 15 வரை உயர்ந்து கிலோ ரூ.60 க்கு விற்பனையானது.

தலையாரிபட்டி விவசாயி அப்பிநாயக்கர் கூறியதாவது: தண்ணீர் பற்றாக்குறையால் 40 சென்ட் நிலத்தில் தக்காளி சாகுபடி செய்துள்ளேன்.

தற்போது பெய்த கோடை மழையால் காய்கள் உதிர்ந்தாலும் நல்ல விலை கிடைக்கிறது. இதனால் தக்காளி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்' என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வெயிலின் தாக்கத்தால் வரத்து குறைவு: காய்கறி விலை கிடுகிடு உயர்வு**



சென்னை: வெயிலின் தாக்கத்தால் கோயம்பேடு மார்க்கெட்டிற்கு காய்கறிகள், கனிகளின் வரத்து குறைந்துள்ளது. இதையொட்டி காய்கறி விலை கிடுகிடுவென

உயர்ந்துள்ளது. இதனால் இல்லத்தரசிகள் கவலை அடைந்துள்ளனர். சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து காய்கறிகள் வருகின்றன. கடந்த சில நாட்களுக்கு முன்புவரை 300 லாரிகளில் காய்கறிகள் வந்தன.

தற்போது தமிழகம் மட்டுமின்றி அண்டை மாநிலங்களிலும் வெயிலின் தாக்கம், போதிய நீர்பாசன வசதி இல்லாமல் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால், தற்போது 200 லாரிகளில் காய்கறிகள் வந்து சேருகின்றன.

## கொப்பரை உலர வைக்கும் பணி தீவிரம்

கிணத்துக்கடவு, : கிணத்துக்கடவு பகுதியில் 200க்கும் மேற்பட்ட கொப்பரை களங்கள் உள்ளன. இங்கு தினமும் 500 டன் கொப்பரை உற்பக்தி செய்யப்படுகிறது. இந்த பகுதியில் சில தினங்களுக்கு முன்பு தொடர்ந்து மழை பெய்து வந்ததால் கொப்பரை உற்பக்தி பாதிப்படைந்தது. மழையால் பாதிக்காத வகையில் கொப்பரையை தார்ப்பாயால் மூடிவைத்தனர். இந் தற்போது மழை நின்று வழக்கம்போல் வெயில் அடிக்க துவங்கியுள்ளதால், கொப்பரையை களங்களில் விவசாயிகள் உலர வைக்கத் தொடங்கியுள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## வரத்து குறைவால் கோயம்பேடு மார்க்கெட்டில் தக்காளி, பச்சை மிளகாய் விலை மீண்டும் உயர்வு



சென்னை,

வரத்து குறைவால் கோயம்பேடு மார்க்கெட்டில் தக்காளி, பச்சை மிளகாய் விலை உயர்ந்துள்ளது.

காய்கறிகள்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் இருந்து சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள புறநகர் பகுதிகளுக்கு காய்கறிகள் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றன. மார்க்கெட்டில் கடந்த சில நாட்களாகவே காய்கறிகளின் விலை ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டு வருகிறது.

கடந்த மாதத்தில் (ஏப்ரல்) காய்கறிகள் விலை குறைந்து காணப்பட்டது. ஆனால் அதே சமயம், இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து அதன் விலை அதிகரிக்க தொடங்கியது. கடந்த வாரத்தில் மட்டும் காய்கறிகள் விலை கொஞ்சம் குறைந்து காணப்பட்டது.

இந்த நிலையில் தற்போது கோயம்பேடு மார்க்கெட்டில் தக்காளி, அவரைக்காய், சேனைக்கிழங்கு, பச்சை மிளகாய், பச்சை பட்டாணி ஆகியவற்றின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.

தக்காளி, பச்சை மிளகாய்

இதுகுறித்து சென்னை கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்தரராஜன் கூறியதாவது:-

கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரத்தில் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு காய்கறிகள் வரத்து குறைந்துள்ளது. இதனால் கடந்த வாரத்தில் விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலையை விட இந்த வாரம் சில குறிப்பிட்ட காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளது.

தக்காளி, பச்சை பட்டாணி, பச்சை மிளகாய், சேனைக்கிழங்கு, அவரைக்காய் ஆகியவற்றின் விலை மீண்டும் உயர்ந்து கொண்டே செல்கிறது. வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் இந்த காய்கறிகள் வளரும் செடிகள் காய்ந்து போய்விடுகிறது. இதனால் விளைச்சல் மிகவும் குறைவாகவே உள்ளது.

நாளொன்றுக்கு 70 லாரிகளில் வர வேண்டிய தக்காளி தற்போது 50 லாரிகளில் தான் வருகிறது. அதேபோல், 15 லாரிகளில் விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட பச்சை மிளகாய் தற்போது 7 லாரிகளில் மட்டும் தான் கொண்டு வரப்படுகிறது.

விலை நிலவரம்

இந்த விலை நிலவரம் அடுத்த மாதம் (ஜூன்) 2-வது வாரம் வரை நீடிக்கும். அதன்பிறகு கொஞ்சம் கொஞ்சமாக காய்கறிகள் விலை குறைவதற்கான வாய்ப்பு இருக்கிறது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் இன்று (நேற்று) விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:-

பல்லாரி - ரூ.15 முதல் ரூ.20 வரை, உருளைக்கிழங்கு - ரூ.22, கேரட் - ரூ.35 முதல் ரூ.40 வரை, நூக்கல் - ரூ.30, சவ்சவ் - ரூ.40, பீட்ரூட் - ரூ.30, முட்டைக்கோஸ் - ரூ.20, இஞ்சி - ரூ.45, பீன்ஸ் - ரூ.80 முதல் ரூ.100 வரை, சேப்பக்கிழங்கு - ரூ.30, வெண்டைக்காய் - ரூ.35, பாகற்காய் - ரூ.25, கொத்தவரங்காய் - ரூ.25, முருங்கைக்காய் - ரூ.40, தக்காளி - ரூ.60, கத்தரிக்காய் - ரூ.20 முதல் ரூ.25 வரை, கோவைக்காய் - ரூ.25, புடலங்காய் - ரூ.30, பீர்க்கங்காய் - 30, சாம்பார் வெங்காயம் - 35, சேனைக்கிழங்கு - ரூ.40, அவரைக்காய் - ரூ.60, பச்சை மிளகாய் - ரூ.90, பச்சை பட்டாணி - ரூ.150, வாழைக்காய் (காய் ஒன்று) - ரூ.5, தேங்காய் (காய் ஒன்று) - ரூ.18 முதல் ரூ.20 வரை. இவ்வாறு அவர் கூறினார்.

## தென்மேற்கு பருவமழை தொடங்குவதை முன்னிட்டு முல்லைப்பெரியாறு அணையில் கண்காணிப்பு குழு ஆய்வு



தேனி,

தென்மேற்கு பருவமழை தொடங்க உள்ளதை முன்னிட்டு முல்லைப்பெரியாறு அணையில் துணை கண்காணிப்பு குழுவினர் நேற்று ஆய்வு செய்தனர். அப்போது அணையில் உள்ள மதகை இயக்கி சோதனை செய்தனர்.

துணை குழு ஆய்வு

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் நீர் ஆதாரமாக விளங்கும் முல்லைப்பெரியாறு அணை, தமிழக-கேரள மாநில எல்லையில் அமைந்துள்ளது.

இந்த அணையின் நீர்மட்ட உயர்வை கண்காணித்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை பார்வையிட்டு வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவுப்படி மூவர் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு உள்ளது. இந்த கண்காணிப்பு குழுவுக்கு உதவியாக துணை கண்காணிப்பு குழுவும் அமைக்கப்பட்டு உள்ளது.

5 பேர் கொண்ட துணை கண்காணிப்பு குழுவினர் முல்லைப்பெரியாறு அணையில் நேற்று ஆய்வு செய்தனர். கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்க உள்ளதை முன்னிட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மதகை இயக்கி சோதனை

இந்த குழுவினர் சுமார் 1 மணி நேரம் அணையில் ஆய்வுகளை மேற்கொண்டனர். பேபி அணை, மதகு பகுதி ஆகிய இடங்களுக்கு சென்று ஆய்வு செய்தனர். அணையில் மொத்தம் 13 மதகுகள் அமைக்கப்பட்டு உள்ளன. இதில் 13-வது மதகை இயக்கி சோதித்துப் பார்த்தனர்.